## தலைப்பு 285–விவசாயத் திணைக்களம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

விவசாயத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விவசாயத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ளஅபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும்

உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குரிய வழிகாட்டல் நியமங்களுக்கு முரணாக நிதிச் செயலாற்றல் கூற்றிலும் ACA - 2 (ii) குறிப்பின் பிரகாரம் 3 உருப்படிகளில் கூட்டுத்தொகை ரூபா 41,272,244 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | இதற்குமுன்னர் இத்திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட மூலதனச் செயற்திட்டங்களின் இறுதியில் பதிவுசெய்யப்பட்டதாலும் வருடாந்த மதிப்பீடு மற்றும் திறைசேரி இறுதி அச்சுக் குறிப்புகளில் மூலதனச் செயற்திட்டங்கள் இறுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளதால் ACA - 2 (ii) படிவத்தில் மூலதனச் செயற்திட்டங்களின் செலவினம் மூலதனச் செலவினத்தின் கீழ் இறுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்கள் ஏசீஏ – 6 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதியல்லாத சொத்துக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு போக்குவரத்து உபகரணங்களுக்காக ரூபா 1,192,187,538 ஆன மீதியொன்று காண்பிக்கப்பட்டிருந்த போதும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 1,311,168,699 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மொத்தம் ரூபா 118,981,161 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. மேலும் 146 வாகனங்களுக்குரிய பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகமான போக்குவரத்து உபகரணங்கள் உரிய உப பிரிவினால் பெறுமதி கணக்காளரின் (சொத்துக்கள் முகாமைத்துவம்) வேண்டுகோளின் பேரில் பொறியியல் பிரிவு தொடர்பு கொள்ளப்பட்டு அந்த சகல வாகனங்களும் 2020.12.31 இல் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்கள் ஏசீஏ – 6 இல் முன்வைக்கப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டிடங்கள் மற்றும் முடிவுறாத வேலைகளுக்காக ரூபா 6,488,833,907 ஆன மீதியொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 1,840,747,836 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 4,648,086,071 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. மேலும் 201 கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் 1351 கட்டிடங்களுக்குரிய பெறுமதியை இனங்காண்பதற்காக மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீட்டு செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு அனுப்பியுள்ள சகல கட்டிடங்களினதும் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் வருடாந்தம் 2104 செலவின விடயத்தின் கீழ் செலவிடப்பட்ட அனைத்து செலவினங்களும் நடைமுறை வேலை விடயங்களாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் சொத்துகள் பதிவேட்டின் கட்டிடங்களின் மதிப்பீட்டுப் பெறுமதி மாத்திரம் காண்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக சொத்துக்கள் பதிவேட்டில் கட்டிடங்களின் பெறுமதி குறைத்து அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும் மதிப்பீட்டுப் பெறுமதி கிடைத்ததன் பின்னர் அவற்றை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிதிக்கூற்றுக்கள் ஏசீஏ – 6 இல் முன்வைக்கப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணிக்காக ரூபா 15,901,284,779 ஆன மீதியொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதும் அக்காணிகளின் பெறுமதி தொடர்பாக தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் 536 காணி அலகுகளுக்குரிய பெறுமதி சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 103 காணிகளுக்குரிய பெறுமதி இனங்காணப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் பெறுமதியை குறிப்பிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் அவ்வாறான நிலத்தின் அளவு குறிப்பாக தெரியாத காணிகள், அவறறின் மதிப்பீட்டு செயற்பாடுகள் இடம்பெற்று வருவதால் அவற்றின் அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாலும் எதிர்காலத்தில் அவற்றினை திட்டவட்டமாக இனஙங்கண்டு சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாக்க நடவடிக்கை எடுப்பதாக | திணைக்களத்தின் சொத்துக்களை இனங்காண்பதற்கும்அவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்கள் ஏசீஏ – 6 இல் முன்வைக்கப்பட்டிருந்த நிதியல்லாச் சொத்துக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் (தளபாடங்கள் உட்பட) என்பவற்றிற்காக ரூபா 943,141,567 ஆன மீதியொன்று குறிப்பிடப்பட்டிருந்த போதும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் தளபாடங்களுக்காக ரூபா 627,054,283 தொகையும் இயந்திர உபகரணங்களுக்காக ரூபா 1,623,627,029 மற்றும் 120 ஸ்ரேலிங் பவுண்களும் 163,985 யப்பான் யென்களும் 7,532,915 அமெரிக்க டொலர் பெறுமதி சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நன்கொடையாக கிடைத்திருந்த அச்சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நன்கொடையாக கிடைத்த சொத்துக்கள் அதிகளவில் காணப்படுவதுடன் அவற்றின் தகவல்களைப் பெற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | சொத்துக்களின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (உ) | நிதி நிலைமை தொடர்பான கூற்று (ஏசீஏ – ஜீ) திறைசேரி கணக்குகள் தகவல்களின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் திறைசேரி அச்சிடல் SA– 70 மற்றும் நிதிக்கூற்றுக்கள் ஏசீஏ 3 இன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திறைசேரிக்கு தீர்வுசெய்ய வேண்டிய ரூபா 53,812,759 தொகை 2020 | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேடு சமப்படுத்தப்பட்டு எஞ்சிய மீதியை திறைசேரிக்கு அனுப்பி புத்தகங்கள் மூடப்பட்டுள்ளதாகவும், கட்டு நிதி கணக்கில் இறுதி மீதி இல்லையெனவும் அது எந்தவொரு வேலைகளிலும் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் (ACA - P) | திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் வழியில் காசாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்பிலும் காசேட்டின் மூலம் தீர்வுசெய்ய வேண்டிய வழியில் காசு மீதி நிதிச் சொத்துக்களில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நடைமுறைப் பொறுப்புக்களாக அல்லது நிதிச்சொத்தொன்றாக காண்பிக்க இயலுமை இல்லையென | |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் தனிப்பட்ட சம்பளம் மற்றும் செயற்பாட்டு செலவினம் ரூபா 5,622,314,992 ஆக இருந்த போதும் ரூபா 4,729,330,732 என காண்பிக்கப்பட்டமையால் தொழிற்பாட்டு செயற்பாடுகளினால் உருவாகிய காசு வெளிப் பாய்ச்சல் ரூபா 892,984,260 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இதன் பின்னர் உங்களால் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரிப்பதற்கு பதிவு செய்துள்ளதாக | தொழிற்பாட்டு செயற்பாடுகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டில் உதவுதொகைகள் மற்றும் மாற்றல்கள் ரூபா 101,889,711 ஆக இருந்த போதும் ரூபா 43,993,255 எனக் காண்பிக்கப்பட்டமையால் தொழிற்பாட்டு செயற்பாடுகளினால் உருவாகிய காசுப் பாய்ச்சலின் வெளிப்பாய்ச்சல் ரூபா 57,896,456 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் (ஏசீஏ-சீ) மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பௌதீக சொத்துக்கள் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளை கையேற்கும் செலவினம் ரூபா 83,208,794 தொகையாக இருந்த போதும் அது ரூபா 1,034,089,513 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 950,880,719 ஆல் முதலீட்டு செயற்பாடுகளினால் உருவாகிய காசுப் பாய்ச்சல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | முதலீட்டு செயற்பாடுகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 1.6.4 வர்த்தக முற்பணக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் வருடாந்த இருப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ஆண்டின் இறுதி வரை கந்தபொல விதைக் கிழங்கு பண்ணையில் காணப்பட்ட ரூபா 1,760,000 பெறுமதிய சேதனப் பசளை இருப்புக்கள் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் நிதிப்பிரமாணம் 515 இன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படுமென | இருப்பு பெறுமதியை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ஹொரண பழவகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மற்றும் பிபில பூங்கா பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திடம் காணப்பட்ட வளரும் பயிர்களின் கூட்டுத்தொகை பெறுமதி ரூபா 1,593,089 தொகை நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இறுதி இருப்பிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 515 இன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்படுமென | இருப்பு பெறுமதியை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் 08 பண்ணைகளுக்குரிய 78113 கிலோ கிராம் உரம், 02 பண்ணை களுக்குரிய விதைகள் மற்றும் 143 கிலோ கிராம் நடுகை பொருள் மற்றும் 02 பண்ணைகளுக்குரிய 20,191 கிலோ கிராம் விதைகள் என்பவற்றின் பெறுமதி இணங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் நிதிப்பிரமாணம் 515 இன் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை தயாரிக்கும் போது குறித்த உர இருப்பின் கிரயத்தை கணக்கிட்டு கணக்குகுளில் உள்ளடக்கி சரி செய்வதற்கு குறித்துக் கொண்டதாக | இருப்பு பெறுமதியை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய கட்டிடங்களுக்கு இடையே நேரடியாக முற்பண நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்யும் களஞ்சியம், குளிரூட்டி, விதை தயாரிப்பு பிரிவுகள் போன்ற ரூபா 48,012,125 கூட்டுப் பெறுமதியான கட்டிடங்கள் காணப்பட்ட போதும் அதற்குரிய கட்டிடங்களின் பெறுமதி சொத்துப் பதிவேடுகளுக்கு எடுக்காத காரணத்தினால் சொத்துக்களின் பெறுமதி மற்றும் அச்சொத்துக்களுக்குரிய ஆண்டின் | திணைக்களத் தலைவர்கள், அரச நிதிப்பணிப்பாளருடன் பலசுற்று கூட்டங்கள் நடாத்தப்பட்டு முற்பணக் கணக்கிற்குரிய அனைத்துச் சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்து பெறுமானத்தேய்வு செய்வதற்காக பயன்படுத்த வேண்டுமென தீர்மானித்ததாகவும் அத்தீர்மானத்தின் பிரகாரம் முன்னைய ஆண்டில் | முற்பணக் கணக்கு செயற்பாட்டிற்குரிய சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பெறுமானத்தேய்வு கொள்கை அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்து உரிய சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமானத்தேய்வு ரூபா 960,242 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அவ்வாண்டில் இடம்பெற்ற கொவிட் 19 தொற்றினை யடுத்து இடைநிறுத்த வேண்டியயேற்பட்டதாகவும் அனைத்துச் சொத்துக்களையும் மீள் மதிப்பீடு செய்து முற்பணக் கணக்கிற்குரிய அனைத்து சொத்துக்களையும் பெறுமானத்தேய்வு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | |
| (உ) | 10 பண்ணைகளுக்குரிய 21 மோட்டார் வண்டிகள், 13 பண்ணைகளுக்குரிய 102 இயந்திர உருப்படிகள், 8 பண்ணைகளுக்குரிய 29 டிரக்டர் மற்றும் டேலர்கள், 03 பண்ணைகளுக்குரிய 18 கட்டிட உருப்படிகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து முற்பணக் கணக்கிற்குரிய அனைத்து சொத்துக்களுக்கும் பெறுமானத்தேய்வு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்களின் பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | 2 பண்ணைகளுக்குரிய ரூபா 716,928 ஆன இயந்திரங்களின் பெறுமதி, அம்பதன்ன பண்ணையின் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணப்பட்ட ரூபா 804,111 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 808,950 ஆன டிராக்டர் மற்றும் டேலர்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து முற்பணக் கணக்கிற்குரிய அனைத்து சொத்துக்களுக்கும் பெறுமானத்தேய்வு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்களின் பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் இம்முற்பண செயற்பாடுகளுக்குரிய 13 வாகனங்களுக்குரிய ரூபா 13,770,915 பெறுமதியான கால்நடை வளங்கள் இருப்பதாக கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அவதானிக்கப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதற்காக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கால்நடை வளங்கள் உயிரியல் விஞ்ஞான வளமொன்றாக இருப்பதுடன் அதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு முறையொன்றை கண்டுபிடிக்க முடியாமையால் இக்கால்நடை வளங்களை கணக்கீட்டு நடவடிக்கைகளிலிருந்து புறக்கணித்திருப்பதாக | கால்நடை வளங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஏ) சீதாஎலிய விதை உருளைக் கிழங்கு களஞ்சியத்தில் மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சியத்தில் உள்ள உருளைக் கிழங்கு இருப்பின் பெறுமதி ரூபா 60,693,557 ஆக இருந்த போதும் நிதிக்கூற்றுக்களுக்காக உரிய விதை உருளைக் கிழங்கு இருப்பின் பெறுமதி நுவரெலியா பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) 2020 பெப்ரவரி 12 ஆந் திகதிய பீ அக/சீ/08 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட இருப்பு பெறுமதியான ரூபா 53,087,084 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இருப்பு பெறுமதி ரூபா 7,606,473 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. அதன் பிரகாரம் சரியான இருப்பு பெறுமதி என்ன என்பது கணக்காய்விற்கு உறுதிப்படுத்த முடியவில்லை. | இதற்கான உரிய பதிலை உரிய பணிப்பாளரிடமிருந்து மீண்டும் கோரியுள்ளதால் பதில் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் சமர்ப்பிக்கப்படுமென | இருப்பு பதிவேடுகளை நாளதுவரையாக பேணிச் செல்லுதல் மற்றும் ஆண்டின் இறுதியில் இருப்பு சரியாக கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.5 கட்டுநிதி மீதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஏசீஏ – 3 இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டுநிதிக் கணக்கின் இல. 7002/81/19 இன் ஆரம்ப மீதியான ரூபா 13,333,278 ஆன பெறுமதிக்கு ஏனைய மூலாதாரங்களிலிருந்து கிடைத்த கட்டுநிதியான ரூபா 32,205 சேர்க்கப்பட்டு ரூபா 13,365,483 தொகை செலவினங்களின் மூலம் தீர்வு செய்யப்பட்டிருந்த போதும் அது கட்டுநிதிக் கணக்கில் வேறாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக பெறுமதி வெவ்வேறாக சமர்ப்பிக்க முடியாமல் இருந்தமையால் எதிர்காலத்தில் வெவ்வோக பெறுமதிகளை முன்வைப்பதற்கு பதிவுசெய்து வைக்கப்பட்டுள்ளதாக | முன்னைய ஆண்டிற்கும் மீளாய்வாண்டிற்கு உரிய கட்டுநிதி தீர்வு வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசேட்டின் படி ரூபா 53,812,759 ஆன கட்டுநிதி தீர்வு செய்யப்பட்டிருந்த போதிலும் அது கட்டுநிதி கணக்கு (ஏசீஏ – 3) இல் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக காசு மூலம் தீர்வு நிரலில் பதிவுசெய்யப்படாததுடன் அவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருக்க குறித்துக் கொள்கின்றேன். | கட்டுநிதிக் கணக்கை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பண்ணை பராமரிப்பு மற்றும் விதை சந்தைப்படுத்தல் முற்பண கணக்கு செயற்பாட்டிற்குரிய மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 12,175,459 தொகையான கடன்கொடுத்தோர் மீதியை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இக்கடன் மீதி விவசாய அமைச்சினால் ஏதேனும் நடவடிக்கைகளுக்காக ஆண்டின் இறுதியின் போது வழங்கப்பட்ட தொகையாகும். இதன் உறுதிப்படுத்தலை செயலாளரே உறுதிப்படுத்த வேண்டும் அது தொடர்பாக அவ்வப்போது விசாரித்த போதும் பதில் அளிக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் பண்ணை முற்பணக் கணக்கில் சொத்துக்கள் அகற்றும் கிரயமாக ரூபா 26,496,732 குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதற்குரிய கையகற்றல் பெறுமானத்தேய்வு திட்ட வட்டமாக கணக்கிடுவதற்குரிய அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து முற்பணக் கணக்கிற்குரிய அனைத்து சொத்துக்களுக்கும் பெறுமானத்தேய்வு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | சொத்துக்களை அகற்றும் பெறுமானத்தேய்வு சரியாக கணக்கிடுவதற்கு அதற்குரிய சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டின் முதலாவது நான்கு மாதங்களுக்குரிய கட்டுநிதி நிதி திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் | கொவிட் 19 தொற்று காரணமாகவும் 2020 இற்குரிய வரவு செலவுத்திட்டம் 2020 திசெம்பர் 20 வரை | நிதிப் பிரமாணங்கள் ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | திட்டத்தை மிகைத்து கட்டுநிதி கூடுதலாக கோரப்பட்டிருந்தது. எஞ்சிய எட்டு மாதங்களுக்காக கட்டுநிதி தேவைப்பாட்டை திட்டமிடாமல் கட்டுநிதி கோரப்பட்டிருந்தது. | தாமதித்தமை காரணமாகவும் இடைக்கால சமர்ப்பண கணக்கு 3 இன் கீழ் நடவடிக்கை எடுத்தமையால் உத்தேச கட்டுநிதி திட்டத்தை தயாரிக்க முடியாமல் போனது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய மாதங்களுக்கு ஒப்பாக நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் முறையே ரூபா 1,018,643,000 மற்றும் ரூபா 1,453,606,000 என கூடுதலான கட்டுநிதியொன்று கோரப்பட்டிருந்தது. அம்மாதங்களில் கிடைத்த கட்டுநிதி கோரப்பட்ட அளவினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. எவ்வாறாயினும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி திறைசேரிக்கு ரூபா 53,812,759 கட்டுநிதி தீர்வுசெய்யப்பட்டிருந்தது அதன் பிரகாரம் மாதாந்த கட்டுநிதி கோரல் சரியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் கொடுப்பனவு செயற்பாடுகள் அதிகளவில் மேற்கொள்ளப்படுவதால் மதிப்பிடப்பட்ட தொகையில் கூடுதலான கட்டுநிதி அளவொன்று கோரப்பட்ட போதும் திறைசேரியால் கேட்கப்பட்ட தொகை சமமான நிதிஏற்பாட்டினை வழங்கவில்லை. எனினும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி திறைசேரிக்கு ரூபா 53,812,759 கட்டுநிதி தீர்வு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் அதற்கான காரணம் திணைக்களத்தின் வருமானம் அதிகரித்தமை மற்றும் வெளிநாட்டு மானியங்கள் மற்றும் ஏனைய செயற்திட்டங்களின் கீழ் நிதிஏற்பாடு செலவு வைக்கப்பட்டிருந்ததாக | தேவைப்பாட்டின் பிரகாரம் கட்டுநிதி கோரப்பட வேண்டும். |

## 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி பிரமாணம் 85(1)(இ), நிதிப்பிரமாணம் 143(1) மற்றும் 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருமான மதிப்பீடுகளை முடிந்தவரை நடைமுறை ரீதியிலும் சரியாகவும் தயாரிக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் வருமானக் குறியீடு 2003.02.18 இற்காக ஆரம்ப மதிப்பீடு ரூபா 318,000,000 ஆன வருமானம் ரூபா 340,000,000 என திருத்தம் | விவசாய நடவடிக்கைகளுக்காக மக்களை அதிகளவில் ஈடுபடுத்துவதால் மூன்றாம் காலாண்டின் இறுதியில் அதிகளவில் வருமான அதிகரிப்பு விகிதமொன்று காண்பித்ததுடன் அதற்கு ஒப்பாக மீண்டும் ஒருமுறை வருமானத்தை திருத்தம் செய்வதற்கு அரச நிதிக் கொள்கை திணைக்களத்துடன் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருமான மதிப்பீடு சரியான தயாரித்தல் மற்றும் திருத்தங்களை மேற் கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தேறிய வருமானம் ரூபா 488,134,208 ஆக இருந்தமையால் மதிப்பீடு செய்த வருமானத்தை விட 44 சதவீதம் உழைக்கப்பட்டிருந்தது. | கலநதுரையாடல் இடம்பெற்ற போதும் 2021 ஆம் ஆண்டின் வரைவு வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதால் மீண்டும் ஒருமுறை திருத்தம் செய்ய முடியாதென அறிவிப்பதாக | |

## 2.3 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய அளவிலான விவசாய ஆராய்ச்சி செயற்திட்டத்திற்குரிய செலவின விடயத்திற்கு ஒதுக்கீடு செய்த நிதிஏற்பாடான ரூபா 3,000,000 பெறுமதியான தேறிய ஒதுக்கீடு செலவிடப்படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தமையால் சிறிய அளவிலான விவசாய ஆராய்ச்சி செயற்பாடுகளின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மத்திய வங்கியில் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இச்செலவின விடயத்திற்காக திறைசேரியிடமிருந்து கட்டுநிதி விடுவிக்கப்படுவதுடன் அவ்வாறான ஒன்று இடம்பெறவில்லை எனபதால் இவ்வாண்டில் மேற்படி சிக்கலன நிலைமையை தவிர்ப்பதற்காக இந்த செலவின நிதியளிப்பினை 13 இன் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாட்டை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 மூன்றாவது போகத்தில் பயறு மற்றும் கௌபி என்பன விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 20000 ஹெக்டேயர் அதாவது 49420 ஆன பயிர்ச்செய்கை அளவொன்றை செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. அங்கு ஏக்கரொன்றுக்காக 10 கிலோ கிராம் வீதம் பயறு விதைகள் வழங்குவதற்கு ரூபா 330 வீதம் வரும் வகையில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 10 ஏக்கருக்கு 10 கிலோ கிராம் வீதம் 49420 ஏக்கருக்காக தேவையான பயறின் அளவு 494200 கிலோ கிராம் மற்றும் அதன் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 163,086,000 ஆக இருந்தது. | விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகை பொருட்கள் நிலையத்தின் மூலம் நாட்டின் விதை வித்தியாசங்களின் பிரகாரம் மற்றும் உற்பத்திக்காக ஏற்படும் செலவினத்ததை கருத்திற் கொண்டு விதை விலை மாற்றங்கள் மேற்கொள்ளப்படு கின்றது. ஆதலால் விலையில் வரும் சிறு விலகலையும் இடமளிக்கப்பட்டு விலை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. வினாவில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் ரூபா 16,914,000 ஆன மதிப்பீடொன்றாக இருந்த போதும் அதன் போது விலை அதிகரித்தால் விதை 1 கி.கிராம் ரூபா 360 என மதிப்பீடு | மதிப்பீடு மிகவும் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 180,000,000 நிதிஏற்பாடு செய்த காரணத்தினால் ரூபா 16,914,000 ஆன மிகை மதிப்பீடொன்று இடம்பெற்றருந்தது. | செய்யப்பட்டுள்ளது. அப்போதய விலை 1 கி.கிராம் ஒன்றிற்காக ரூபா 320 ஆக இருந்தது.) இவ்வாறு இடம்பெறாவிட்டால் விதை விலை அதிகரிக்கும் போது வழங்கப்பட வேண்டிய விதை அளவு குறைவடைந்தமை பயிர்செய்கை இலக்கை பூர்த்தி செய்வதற்கு முடியாமையால் உற்பத்தி குறைவடைந்து நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தது. |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டங்கள் மற்றும் பயிற்சி கணக்குகள் மற்றும் பொருளாதார சேவைக் கணக்கு கிளைக்குரிய 2021 சனவரி மாத கொடுப்பனவுகள் தொடர்பாக உறுதிச்சீட்டுக்களை பரீட்சித்த போது 65 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,632,944 ஆன செலவினம் தொடர்பாக நிதிப் பிரமாணம் 94 மற்றும் 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் குறிப்பு (iii) கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உறுதிச்சீட்டுக்கள் கொடுப்பனவிற்காக நிதி போதியளவில் இல்லாமையால் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பொறுப்பாக காண்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் இந்த உறுதிச் சீட்டுக்களுக்குரிய செலவினம் விவசாயத் திணைக்களத்தின் நடவடிக்கைகளைக் தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக அத்தியவசி யமாக செலவிட வேண்டிய செலவினமாக இருப்பதால் 2021 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடுகளை பயன்படுத்தி கொடுப்பனவு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுளள்தாக | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 2.5 முற்பணங்களை வழங்குதலும் தீர்வுசெய்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4:2:2, 4:2:4, 4:2:5, 4:3, 4:4, 4:5, 4:6 மற்றும் 6:3 பிரிவுகளின் படி, இறந்த ஓய்வூபெற்ற, | நிதிப்பிரமாணங்களின் பிரகாம் பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை, ஓய்வூதிய கோவைகள் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்புவதில் தாமதம் மற்றும் சில அறவிடப்படாத | தாபனக் விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | சேவைக்காலம் போதியதாக இல்லாமையால் ஓய்வூதியம் இல்லாமல் ஓய்வுபெற்ற, பணிகளில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட, வெளிநாட்டிற்கு சென்ற மற்றும் பரவலாக்கத்தின் கீழ் பல்வேறு துறைகளுக்கு மாற்றப்பட்ட 92 உத்தியோகத்தர்களுக்குரிய மொத்தம் ரூபா 5,369,088 ஆன கடன் மீதிகளை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | மீதிகள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ளப்படுவதாக | |
| (ஆ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 11 ஆம் இலக்கத்தின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனக் கடன்களைப் பெற்றவர் கடன் தவணைகளை செலுத்தவில்லை என்றால், சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் தொடர்புடைய சொத்தை ஏலத்தில் விற்று நிலுவை கடன்களை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் திணைக்களத்தில் பணியாற்றிய 08 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு உரிய ரூபா 805,234 கூட்டுத்தொகையான கடன் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சில உத்தியோகத்தர்கள் பிணை உறுதியை வழங்காமை அடிப்படையில் அறவிட முடியாமல் இருந்ததாகவும் அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருந்தது, சில கடன் மீதிகளை பணமாக கொடுப்பனவு செய்வதற்கு இனங்கியுள்ளதாகவும் சில ஆதனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | குறித்த நிலுவைக் கடனை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கொடுக்கள் வாங்கல்களை முடிவுருத்தும் 5 முற்பண கணக்குகளுக்குரிய 18 ஆண்டுகளுக்கும் 28 ஆண்டுக ளுக்கும் மேற்பட்ட அனுமதிக்கப்படாத செயற்பாடு கலைத்தல் கணக்கிற்குரிய நட்டத் தொகையின் கூட்டுத்தொகை ரூபா 67,146,096 மற்றும் விடய இலக்கம் 285-05 உடைய உறுதிப்படுத்திய முற்பண கணக்கிற்குறிய விதை மற்றும் நடுகைப் பொருட்கள் முற்பண கணக்கிற்கு 28 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த ரூபா.76,157 தொகை தீர்க்கப்பட வேண்டியிருந்தது. | இச்செயற்பாடு முன்னுரிமையான செயற்பாடொன்றாக கருதி எம்மால் எடுக்கக்கூடிய அனைத்து செயற்பாடுகளையும் எடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்விடயம் அரசாங்க கணக்குகள் குழுவில் கலந்துரையாடியதன் பின்னர் தேவையான அடுத்த நடவடிக்கைகளை எடுத்து கலைப்புக் கணக்கினை முழுமையாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென | நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் கலைப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

## 2.6 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 04 வைப்புக் கணக்குகளுக்குரிய 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 7,859,871 கூட்டுத்தொகையான 20 வைப்புக்கள் தொடர்பாக அவ்வாறு நிதிப் பிரமாணம் 570, 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சில வைப்புக்கள் தீர்வு செய்யும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படாமையால் குறைபாடுகளை திருத்திக் கொள்வதற்கு உள்ளதால் மீண்டும் பரீட்சிக்கும் வரை நிறுத்தி வைத்துள்ளதாகவும் SARCC அமைப்பு நிதியத்தினால் கணக்காய்வொன்று செய்யப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ரூபா 4,015,531 தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

## 2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 6.1 உப பிரிவு | எதேனும் பதவியொன்றுக்கு ஒதுக்கப்பட்ட வீடொன்று தவிர ஏனைய அனைத்து வீடுகளின் குத்தகை காலம் 05 ஆண்டுகள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தெரிவு பரிசோதனையின் போது 02 நிறுவனங்களில் 19 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளை விஞ்சி 04 ஆண்டு முதல் 11 ஆண்டுகள் வரையான காலமாக அரச வீடுகளில் தொடர்ச்சியாக குடியிருந்தனர். | அரச வீடுகளில் 5 ஆண்டுகளை மிகைத்து குடியிருக்கும் வீடுகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கும் காத்திருப்பு பதிவேட்டில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் உத்தியோகபூர்வ வீடுகளை வழங்குவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

(ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடிரசின் நிதிப் பிரமாணக் கோவை
-------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104(4) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கும் அதற்குரிய பிரதேச அலகுகளிற்கும் உரிய 01 ஆண்டு முதல் 32 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த 110 சந்தர்ப்பங்களில் இடம்பெற்றிருந்த ரூபா 19,443,173 தொகையான சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பரிசோதனை செயற்பாடுகள் இடம்பெற்றிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் பரிசோதனை செயற்பாடுகள் மேற்கொண்டு பொது 283 வி.ப.நா. இற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 42 சந்தர்ப்பங்கள், பொது 284 வி.ப.நா. இற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 44 சந்தர்ப்பங்கள், பொது 284 அங்கீகாரம் கிடைத்த அறவீடுகள் முடிவடைந்துள்ள 10 சந்தர்ப்பங்கள், பொது 285 வி.ப.நா. இற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள 11 சந்தர்ப்பங்கள், மற்றும் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ள 4 சந்தர்ப்பங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 175(2) | பண்ணை முற்பணக் கணக்கிற்குரியதாக 01 ஆண்டிற்கு மேற்பட்ட 67 கடன்பட்டோர்களுக்குரிய ரூபா 3,275,852 ஆன கடன்பட்டோர் மீதிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இக்கடனை அறவிடுவது தொடர்பாக தற்போது குழுவொன்று மூலம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக | - மேற்படி - |
| (iii) | நிதிப்பிரமாணம் 753 | பொருட்களை வழங்கும் போதும் பெறுகையின் போதும் வழங்கல் கட்டளையொன்றும் பெறுகை கட்டளை யொன்றும் தயாரிக்கப்பட வேண்டிய போதும் ரூபா 7,373,000 தொகையான 60 நடமாடும் சூரிய சக்தி நீர்ப்பம்பி தொகுதிகளும் கொண்டு செல்லும் விசிறும் நீர் முறைமைகள் மற்றும் ரூபா 17,727,230 ஆன 869 மின்சார வேலிகளை விநியோகிப்பதற்குரிய பெறுகை கட்டளை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வழங்குனரால் எனஜய்சர் உபகரணங்கள் பிரதேச விவசாய விரிவாக்கல் பிரிவுகளுக்கு பகிர்ந்தளித்து எழுத்துமூலமாக பொறுப்பேற்றதற்கான குறிப்புக்கள் விரிவாக்கல் மற்றும் பயிற்சி பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் 2009 பெப்ரவரி 20 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்த 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட செயற்பாட்டுக் கோவையின் I ஆவது தொகுதியின் xviii ஆம் அத்தியாயத்தின் 202 ஆம் விதியின் ஏற்பாடுகள். | 09 நிறுவனங்களுக்குரிய 85 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் ஒரே நிறுவனத்தில் சேவை புரிந்து வந்ததனர். | வருடாந்த இடமாற்றல் விண்ணப்பங்கள் ஒன்றிணைந்த செயலாளர் நாயகததிற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் இடமாற்றம் கிடைக்கவில்லையெனவும் சில உத்தியோகத்தர்களுக்க பதவி உயர்வு கிடைத்து வேறிடங்களில் சேவைக்கு அறிக்கையிட்டுள்ளதாக | செயற்பாட்டுக் கோவையின் சட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் 500 தேனீ பெட்டிகளை கொள்வனவு செய்வதற்காக பிந்துனவெவ பண்டாரவெல தேனீக்கள் அபிவிருத்தி பிரிவு மற்றும் தெஹியோவிட பம்பசாரா தேனீ பெட்டிகளை உற்பத்தி நிறுவனங்களுக்களுக்கு மொத்தம் ரூபா 762,500 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த நிறுவனங்களால் 351 தேனீப் பெட்டிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | இதுவரை உற்பத்தியாளர்களுக்கு குறித்த கொடுப்பனவை மேற்கொள்ளவில்லை என்பதாக | நிதிப் பிரமாணம் 215 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய அளவிலான வியாபாரங்களை அபிவிருத்தி செய்வதினூடாக விவசாய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான 02 செயற்திட்ட முன்மொழிவுகளுக்காக நிதி ஏற்பாடாக ரூபா 16,175,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதில் பயன்பாடு ரூபா 5,388,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 10,787,000 அதாவது 67 சதவீதம் சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டது. | பொலிதீன் சீலர் இயந்திரங்களுக்காக கூறுவிலை சமர்ப்பிக்காமை மற்றும் மீண்டும் பெறுகை செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு காலம் இல்லாமை காரணமாக பொலிதீன் சீலர் இயந்திரம் கொள்வனவு செய்யப்படவில்லை. காளாண் பொதி மேசைகளுக்காக மூலப்பொருள் இறக்கமதி செய்வதற்கு முடியாமை காரணமாக 80 காளாண் பொதி மேசைகள் கொள்வனவு இடம்பெறவில்லையெனவும் 250 தேன் பெட்டிகளை குறைந்த விலைகளுக்கு பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்ததால் இந்நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டதாக | நிதி ஏற்பாடுகளை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | சமூக பொருளாதார திட்டமிடல் நிலையத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியை அடைந்து கொள்வதற்கு கட்டாயமாக, ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் வெளிக்களத்தில் செல்வது ஊடாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக சமூக பொருளாதார சிக்கல்களை அடையாளம் காண்பது மேற்கொள்ளப்பட வேண்டிய போதும் சமூக பொருளாதார திட்டமிடல் சேவைத் துறையில் பணியாற்றும் விவசாய பொருளாதார நிபுணர்கள் கடந்த | உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய பொருளியல் விஞ்ஞானம்) மூலம் விவசாய பொருளியல் விஞ்ஞானத்துறைக்கு உரிய சிக்கல்களை இனங்காண்பதற்காக பிராந்திய செயற்பாட்டுக் குழு (PTWG) விற்கு முன்வைக்கும் ஆராய்ச்சி சிக்கல்களை பிரதானமாக அடிப்படையாக கொள்வதாகவும் தேசிய ரீதியில் செய்யப்படும் தேவைகளுக்கு ஈடாகும் | வெளிக்களத்தில் காணப்படும் சமூக பொருளாதார பிரச்சினைகளை இனங்கண்டு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் ஆராய்ச்சி பெறுபேறுகளை விவசாய கொள்கைகள் மற்றும் தீர்மானம் எடுக்கும் போதும் செயற்திட்டங்களை செயற்திறனாக செயற்படுத்த |

| | | | |
|---|---|---|---|
| | நான்கு ஆண்டுகளில் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ள வெளிக்களத்திற்கு சென்று அவ்வாறான பிரச்சினைகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆராய்ச்சிகள் மற்றும் பொருளாதார விஞ்ஞானிகளால் கோட்பாட்டு ரீதியான சிக்கல்கள் இனங்காணப்பட்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதாக | நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | இலங்கையில் தேனீக்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் தேன் உற்பத்தி பற்றிய தகவல்களை சேகரிப்பது பிந்துனுவ தேனீ அபிவிருத்தி பிரிவின் முக்கிய செயற்பாடாக இருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் பின்னர் இதுபோன்ற தகவல்கள் எதுவும் சேகரிக்கப்படவில்லை. இதன் காரணமாக, தீவு முழுவதும் உள்ள தேன் உற்பத்தியாளர்களின் எண்ணிக்கை, உள்ளூர் தேவையை பூர்த்தி செய்ய வருடாந்த தேன் உற்பத்தி போதுமானதா, மற்றும் தேன் உற்பத்தியை ஊக்குவிக்க செயற்படுத்தப்பட வேண்டிய நடைமுறைகள், திட்டங்கள் மற்றும் திட்டங்களை செயற்படுத்துவதற்கு முகாமைத்துவத்திற்கு குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு எந்தவொரு நடைமுறை யொன்றும் காணப்படவில்லை. | தேனீக்கள் கட்டுப்பாட்டு தரவுகளைச் சேகரிக்கும் போது மாகாண விவசாய பணப்பாளர்கள் மற்றும் பிரதி விவசாயப் பணிப்பாளர்களுக்கு அந்த படிவங்களை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதகவும் அதன் போது அவர்களால் தகவல்களை மீண்டும் வழங்குதல் மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்ததன் காரணமாக வருடாந்தம் அந்த அனைத்து தரவுகளையும் சேகரித்து அறிக்கை யொன்றை தயாரிப்பதற்கு சிரமமாக இருந்தது, | நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் |
| (ஈ) | 2020 ஆம் ஆண்டின் மூன்றாவது போகத்தில் பயறு மற்றும் கௌபி விசேட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிரதேசத்தின் பயறு பயிர்ச்செய்கை சம்மேளனக் குழு மற்றும் மாவட்டத்தில் உள்ள பயறு பயிர்ச்செய்கை சம்மேளனக் குழுக்களை ஒன்று திரட்டி மாவட்ட பிரதேசத்தின் பயறு பயிர்ச்செய்கை சம்மேளனம் மாவட்ட செயலாளர், பிரதி விவசாய பணிப்பாளர், கமநல சேவைகள் ஆணையாளர், நீர்ப்பாசன பணிப்பாளர், வதிவிட வியாபார முகாமையாளர், வலய பொறுப்பு | தகவல்களை விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இது தொடர்பாக குறித்த பணிப்பாளருக்கு ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளதாக | செயற்திட்டத்தின் நோக்கங்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உதவி விவசாய பணிப்பாளர்கள் மற்றும் பிரதேச சம்மேளனத்தின் தலைவர்கள் செயலாளர்கள் மற்றும் பொருளாளர்களைக் கொண்டு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | மஹிந்த சிந்தனை எதிர்கால தொலைநோக்கின் கீழ், விவசாயிகளின் சந்தைப்படுத்தல் பிரச்சினைகளை தீர்க்க தேசிய உணவு பாதுகாப்புக்கு வழிகாட்டும் நோக்கத்துடன் விவசாய தகவல் தொடர்பிற்காக நாடு பூராகவும் அமைந்துள்ள 550 கமநல சேவை நிலையங்களுடன் விவசாயத் திணைக்களத்தின் நிறுவனங்களுடன் வலையமைப்பிற்கு உட்படுத்துதல் ஒரு நோக்காக கொண்டு தேசிய விவசாய தகவல் மற்றும் தொடர்பாடல் நிலையம் அமைக்கப்பட்டிருந்த போதும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவ்வாறு வலையமைப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செவிப்புல கற்புல நிலையத்தின் மூலம் வழங்கப்படும் சேவைகளை முன்னேற்றுதல் மற்றும் தேசிய தகவல் வலையமைப்பினை தாபித்தல் போன்ற அடிப்படை நோக்கங்களை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் கட்டிட வசதிகளை வழங்குவதற்காக 2012 செப்தம்பர் மாதம் NPD/AG/CM/12/11 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. வலையமைப்பினை மேற்கொள்வதற்காக நோக்கங்களுக்காக இப்பிரிவு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதாக | எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஊ) | இளம் விவசாய சமூக இயக்கம் 2015 ஆம் ஆண்டு முதல் 05 ஆண்டுகளில் 5,000 கழகங்களையும் 250,000 இளைஞர் பயனாளிகளையும் இலக்காக வைத்துள்ள போதிலும், இதுவரை 535 சங்கங்கள் மாத்திரமே பதிவு செய்யப்பட்டிருந்தன. இது இலக்கு சதவீதத்தில் 10.7 சதவீதம் அளவிலான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. | இளம் விவசாய சமூக சங்கம் தாபிக்கப்பட்டு 06 மாத காலம் அதன் செயற்பாட்டின் பின்னர் இளைஞர் விவசாய சமூக தலைமையகத்தில் பதிவுசெய்யப்படுகின்றது. ஆதலால் இது இலக்கு சதவீதத்தில் 10.7 சதவீதம் அளவினைக் கொண்டிருந்தது | எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (எ) | பீதுருதாலகால பண்ணையில் 09 விதை உருளைக்கிழங்கு களஞ்சியங்களை மீள வயரிங் செய்வதற்காக ரூபா 280,770 பெறுமதியான வயரிங் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2020 ஆகஸ்ட் 19 ஆம் திகதி | விவசாய பண்ணையின் வயரிங் வேலைகளை மேற்கொள்வதற்காக போதியளவு தொழில்நுட்ப அறிவுடன்கூடிய ஊழியர் ஒருவர் இல்லாமையால் சீதாஎலிய கிளைக்குப் பொறுப்பான தொகுதியில் | குறித்த செயற்பாடுகளை உரிய காலத்தில் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| வரை ஒரு களஞ்சியம் மாத்திரமே வயரிங் செய்யப்பட்டிருந்தது. மேலும், 04 மற்றும் 05 ஆம் இலக்க களஞ்சியங்களை பழுதுபார்ப்பதற்கான ஒப்பந்தம் ஒன்று 2019 நவம்பர் மாதம் நிர்மாண நிறுவனத்திற்கு ரூபா 299,270 தொகைக்கு அளிக்கப்பட்டிருந்த போதும் உரிய நிர்மாண செயற்பாடுகள் 2020 ஆகஸ்ட் 19 ஆம் திகதி வரையிலும் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தரொருவர் பண்ணைக்கு கொண்டு வரப்பட்டு இரண்டு களஞ்சியங்கள் மாத்திரம் நிறைவு செய்யப்பட்டிருந்தன. ஏனைய கிளைகளில் நடவடிக்கை எடுக்கும் போது எதிர்காலத்தில் நிறைவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 10 மேலதிக வெளிக்கள பயிர்களின் உள்ளூர் விதை உற்பத்தி பரிசோதனையின் போது அந்த பயிர்களின் விதை உற்பத்தி தேசிய விதை தேவைப்பாட்டில் 50 சதவீதத்திற்கும் குறைவாக இருந்ததுடன் மக்காச் சோளம் (திறந்த மகரந்தச் சேர்க்கை) மற்றும் பெரிய வெங்காய உற்பத்தி தேசிய விதை தேவைப்பாட்டிலிருந்து 1 சதவீதத்திற்கும் குறைவாக எடுத்திருந்த காரணத்தினால் இவ்விதை உற்பத்தி தொடர்பாக திணைக்களத்தின் பங்களிப்பு குறைவான மட்டத்தில் உள்ளது. | தேசிய விதை தேவைக்கு ஒப்பாக எமது பிரிவிற்கு உற்பத்தி செய்யக்கூடிய விதையின் அளவு மதிப்பீடு செய்யப்படுவதுடன் அத்தேவைப்பாட்டிலிந்து 25 சதவீதத்திலிருந்து 50 சதவீதத்திற்கு இடைப்பட்ட பெறுமதியை எடுக்கின்றது. மக்காச் சோளம் விதை உற்பத்திக்கு ஒப்பாக விதை மற்றும் உபகரண பொருட்கள் உற்பத்தி 9.2 சதவீதமாக இருப்பதுடன் விவசாயிகளுக்கு இடையே இறக்குமதி செய்யப்பட்ட கலப்பு சோளமே பிரசித்தி பெற்றுள்ளது. எதிர்காலத்தில் மிகவும் சிறந்த இனங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் சோள உற்பத்தியை தேவைப்பாட்டின் பிரகாரம் அதிகரிப்பதற்கு இயலுமை உள்ளது. | உள்நாட்டு ரீதியில் விதை உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சமூக பொருளாதார திட்டமிடல் நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட விவசாய பொருளாதார நிபுணர்களின் எண்ணிக்கை 23 ஆக இருந்ததுடன், கணக்காய்வு திகதியான 2020 ஒக்டோபர் 23 ஆந் திகதி வரை அவர்களில் 11 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டிருந்தனர். எனினும் இந்நிலையத்தின் மூலம் சமர்ப்பித்த அறிக்கையின் படி, கடந்த மூன்று ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகள் அல்லது ஆய்வுகளின் எண்ணிக்கை 17 போன்ற குறைவான மட்டத்தை எடுத்திருந்தது. | உதவி விவசாய கல்வி பணிப்பாளர் (பொருளியல்) மூலம் செயற்படுத்தப்படும் ஆராய்ச்சி அறிக்கைகளின் அளவு உத்தியோகத்தர்களின் அல்லது நிறுவனத்தின் செயலாற்றலை அளவிடுவதற்கு பயன்படுத்தும் மிகவும் பொருத்தமான அளவுகோல் அளவு மற்றும் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் எண்ணிக்கையை விட குறைவாகவும் அத்தோடு ஒவ்வொரு ஆய்விற்காகவும் எடுக்கும் காலம் ஒன்றுக்கொன்று வேறுபடுவதாகவும் ஒவ்வொரு ஆய்வும் தேசிய ரீதியில் வரும் பங்களிப்பு வெவ்வேறாகும். அத்தோடு உயர்தரமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு உரிய மென்பொருட்களைப் பெற்றுக் கொள்வதில் சிக்கல்களும் ஆய்வு பத்திரங்கள் வரையறுப்பதற்கு காரணமாக உள்ளது. | விவசாயிகளின் சமூக பொருளாதார சிக்கல்களை இனங்கண்டு அதற்காக மிகவும் ஆக்கபூர்வமான தீர்வுகள் சமர்ப்பிப்பதற்கு ஆராய்ச்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளல் வேண்டும். |
| (இ) | பழச் செய்கை விவசாயத் திணைக்களத்தின் பிரதான பிரிவு என்ற போதிலும், பயிர் எதிர்வுகூறல் அறிக்கைகளில் பழங்கள் பற்றிய தகவல்கள் சேர்க்கப்படவில்லை. மேலும் பச்சை இலை காய்கறிகளைப் பற்றிய தகவல்களையும் தொடர்புடைய படிவத்தின் பிரகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் தொடர்புடைய தகவல்கள் அறிக்கைகளில் உள்ளடக்கப்படவில்லை. | பழப் பயிர் செய்கைக்கான தரவு பயிர் எதிர்வுகூறல் தரவு முறைமைக்கு உள்ளடக்குவதற்கு தேவையான மென்பொருள் வடிவமைக்கப்பட்ட போதும் அதில் இடம்பெற்ற தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக இந்நிலைமையை சரி செய்து எதிர்காலத்தில் உரிய தரவுகளை உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பயிர் எதிர்வுகூறல் அறிக்கை மூலம் மிகவும் சிறந்த தகவல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கடந்த ஆண்டு இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உணவுப் பயிர்களின் பகுப்பாய்வு தொடர்பான அறிக்கை (Price analysis of selected food crops in Sri lanka) 2020 ஒக்டோபர் 23 ஆம் திகதி வரை வெளியிடப்படாதிருந்ததுடன், முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நெல் விவசாயிகளால் வன உர முகாமைத்துவத்திற்கான நடை முறைகளை ஏற்றுக்கொள்வதற்கான பகுப்பாய்வு செய்தல் (Analysis of the adoption of site- specific fertilizer management practices by paddy farmers) என்ற ஆய்வு 2020 ஒக்தோபர் 23 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப்படவில்லை. | இந்த ஆராய்ச்சிகள் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படுவதுடன் அந்நிறுவனங்களில் இருந்து தரவுகளைப் பெற்று (இரட்டிப்பு தரவு) அதன் மீது மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளாகும். ஏனைய நிறுவனங்கள் மற்றும் அதனுன் இணைந்து மேற்கொள்ளும் ஆய்வுகளின் போது தரவுகளைப் பெற்றுக்கொள்ளும் முறைமையல் கஷ்டங்கள், தேவையான தரவுகள் இல்லாமை, தொடர்ச்சியாக பல வருடங்களாக தரவுகள் இல்லாமல் இருத்தல் அந்நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் இடமாறுதல் என்பன ஆராய்ச்சிகள் தாமதமாவதற்கு காரணங்களாகும் என. | ஆராய்ச்சி திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் உரிய காலத்தில் ஆராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டின் மூன்றாவது போகத்தில் பயறு மற்றும் கௌபி விசேட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு முக்கிய காரணியான விதைகளைப் முழுமையாக திட்டமிடப்பட்ட பிரகாரம் பெறத் தவறியிருந்ததுடன் திட்டமிடப்பட்ட 22500 ஹெக்டேயர்களில் 10074 ஹெக்டேயர் பயறு மற்றும் 174 ஹெக்டேயர் கௌபி எனப் பயிரிடப்பட்டிருந்தது. அது எதிர்பார்த்த அளவில் பயறு 50.37 சதவீதமாகவும் கௌபி 6.9 சதவீதம் போன்ற மிக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | இதற்கான பதிலை பணிப்பாளரிடம் கோரப்பட்டுள்ளதுடன் பதில் கிடைக்கப் பெற்றதன் பின்னர் சமர்ப்பிப்பதாக. | திட்டமிடல் உரிய ஆராய்ச்சியின் பின்னர் மேற்கொள்வதும் எதிர்பார்த்த இலக்கினை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் |
| (ஊ) | 2014 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் நடத்திய கணக்கெடுப்பின்படி, இலங்கையில் சுமார் 2310000 விவசாயிகள் விவசாயத்தினையே வாழ்வாதாரமாக கொண்டுள்ளதுடன் காலநிலை மாற்றம் குறித்து அவர்களுக்குத் தெரிவிக்க வானிலை முன்னறிவிப்பு குறுஞ்செய்தி ஒன்று அனுப்பும் முறையொன்று ரூபா 1,179,074 ஆன செலவினத்தில் தயாரிக்கப்பட்டிருந்தது. எனினும் 2017 முதல் 2020 வரை, பதிவு செய்யப்பட்ட | பதிவு செய்த விவசாயிகளின் எண்ணிக்கை 3000 அளவில் உள்ளதாகவும் செய்திக்காக தொகையொன்று அறவிடப்படுவதால் அனைத்து விவசாயிகளையும் மேவுகை செய்வது நடைமுறை ரீதியில் சிக்கலாக உள்ளதாகவும் இயற்கை வளங்கள் முகாமைத்துவ நிலையத்தின் மூலம் வழங்கும் குறுஞ் செய்திகள் மாத்திரம் | பதிவுசெய்த விவசாயிகள் எண்ணிக்கையினை அதிகரித்து செயற்றறனாக இச்சேவையை வழங்குவது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | 3164 விவசாயிகளுக்காக 13 செய்திகள் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளன. | மும்மொழகளிலும் வழங்கப்படுவதாக | |
| (எ) | 03 துறைகளில் 22 செயற்திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகளில் 2020 திசம்பர் 31 இற்குள் 100% பௌதீக முன்னேற்றத்தை எட்டும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் 2020 திசெம்பர் 31 இல் 0 சதவீதம் முதல் 50 சதவீதத்திற்கு இடைப்பட்டிருந்ததுடன் குறைந்த செயன் முன்னேற்றமொன்று அடையப்பட்டிருந்தது. | கொவிட் - 19 தொற்று நிலைமை, இயற்கை நிலமை மற்றும் நிதி ஏற்பாடு நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் கிடைக்காமை இச்செயன்முன்னேற்றம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. | செயல் நடவடிக்கைத திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | பயறு மற்றும் கௌபி உற்பத்தியை அதிகரித்தல் மீளாய்வாண்டின் மூன்றாவது போகத்தில் பயறு மற்றும் கௌபி விசேட பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். இருப்பினும், 50 சதவீத பங்களிப்பில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயறு மற்றும் கௌபி உற்பத்தி செய்த விவசாயிகள் மாத்திரம், எவ்வளவு உற்பத்தி செய்தார்கள் என்பது குறித்த மதிப்பீடு மற்றும் தகவல்கள் சேகரிப்பொன்று இடம்பெறவில்லை. மேலும் இந்த திட்டத்தின் உற்பத்தி (Out put) ஒரு ஹெக்டேயருக்கு 0.8 மெட்ரிக் தொன் (800Kg) - 1.2 மெட்ரிக் தொன் (1200Kg) என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 07 மாவட்டங்களில் பயறு செய்கையின் விளைச்சல் ஒரு ஹெக்டேயருக்கு 0.3 மெட்ரிக் தொன் முதல் 0.82 மெட்ரிக் தொன் வரை இருந்தது. அதன்பிரகாரம், இந்த செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் உற்பத்தி 12,267 மெட்ரிக் தொன் அல்லது 69.30 சதவீதம் அளவில் ஆகும். இச்செயற்திட்டத்தின் மூலம் அறுவடைக்கு பின்னைய தொழில் நுட்பத்தை மேம்படுத்த விதை காயவைக்கும் இயந்திரங்களை வழங்குவதற்காக இந்த திட்டம் இனங்காணப்பட்ட போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | இடைநடு போகமொன்றில் மேற்கொள்ளப்படுகின்ற பயிர்ச்செய்கையில் பயிருக்காக நீர் வழங்கலோ மழை நீரோ கிடைத்தல் சிறந்த காரணியாகவும் இச்செய்கை இப்போகத்தில் வயல் காணிகளில் மேற்கொள்ளப்பட்டமையால் அதன் போது நீர் பற்றாக்குறையாக இருந்தமை அல்லது நீர் அதிகரித்தமை விளைச்சல் குறைவுக்கும் காரணமாகவும் அவ்வாறே சில பிரதேசங்களில் காணப்பட்ட பீடைகொல்லி சேதங்களும் விளைச்சல் குறைவிற்கு காரணமாகவும் இப்பயிர் மற்றும் அக்காலத்தில் காணப்படுவதாகவும் குறைவடைவதற்கும் நடவடிக்கை எடுத்த போதும் ஏதேனும் நிலைமையொன்றில் சேதங்கள் ஏற்படுதல் விளைச்சல் குறைவிற்கு காரணங்கள் எனவும் | பயறு செய்கையின் விளைச்சலை அதிகரித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு நோக்கமாக இருந்தது. ஆதலால் ஹெக்டேயருக்கு பெற்றுக்கொள்ளக் கூடிய அறுவடையை அதிகரப்பது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | காய்கறிகளின் உள்ளூர் விதை தேவையை கருத்தில் கொண்டு, விவசாயத் திணைக்களத்தின் பண்ணைகள் மற்றும் ஒப்பந்த திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் 12 நிலையான மற்றும் அடிப்படை விதை வகைகளின் மொத்த விதை உற்பத்தி உள்ளூர் விதை தேவையின் 0.9 சதவீதம் முதல் 15.4 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | காய்கறிகளின் உள்ளூர் விதை தேவையில் ஏதேனும் ஒரு சதவீதம் மாத்திரம் விவசாயத் திணைக்களத்தின் பண்ணைகளில் உற்பத்தி மற்றும் ஒப்பந்த உற்பத்திகள் மூலம் வழங்குவதற்கு இயலுமை இல்லையெனவும் பிரதானமாக விவசாயத் திணைக்களத்தின் அடிப்படை பொறுப்பு பரிந்துரைத்த மரக்கரி இனங்களின் ஆரம்ப விதை உற்பத்தி செய்வதாகும். | உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

## 3.3 எதிர்பார்த்த நலன்களைப் (Outcome) பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இறக்குமதி செய்யப்பட்ட கலப்பின விதைகளை உற்பத்தி செய்வதன் மூலமும், உள்நாட்டில் ஒரு போட்டிச் சந்தையை உருவாக்கி இறக்குமதி செலவைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயத் திணைக்களத்திற்கு இயலுமை காணப்பட்ட போதிலும், கடந்த ஐந்து போகங்களில் அரசாங்க விதை உற்பத்தி பண்ணைகளில் சுமார் 199 கிலோகிராம் கலப்பின காய்கறி விதைகள், கத்தரிக்காய், வெள்ளரி மற்றும் கறி மிளகாய் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தன. | கலப்பு விதை உற்பத்திக்காக பாதுகாப்பு குகை போதியளவு இல்லாமை மற்றும் தக்காளி வெள்ளரி மற்றும் கத்தரிக்காய் போன்ற பயிர்களில் விதை போதியளவு இருப்பு குறைவடைவதற்கு காரணமாக குறிப்பிடலாம். பாகற்காய், கறி மிளகாய் தாய் நாற்றுக்களில் காணப்பட்ட சிக்கல்கள் இனங்காணப்பட்டு பரிசோதனை பிரிவு மூலம் தேறிய வழங்கப்படும் வரை உற்பத்தி செய்ய முடியாது. பரிசோதனை பிரிவு மூலம் வழங்கப்பட்டுள்ள தேறிய பாரம்பரியங்கள் பயன்படுத்தப்பட்டு 2020/2021 சிறு போகத்திலிருந்து உள்நாட்டு கலப்பின விதை உற்பத்தி பண்ணை ஆரம்பிக்கப்பட்டுள் ளதுடன் புதிய பரிந்துரை கலப்பின விதை உற்பத்திக்காக தேவையான நடவடிக்கைளை திட்டமிடப்பட்டுள்ளதாக | கலப்பின விதைகளுக்காக விவசாயிகளுக்கு இடையே கூடிய கேள்வியொன்று காணப்படுவதால் உள்நாட்டு கலப்பின விதை உற்பத்தி அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | வருடாந்த மக்காச்சோள விதைகளில் 98 சதவீதம் இறக்குமதியை சார்ந்தே காணப்பட்டது. இதற்காக மீளாய்வு ஆண்டில் மக்காச்சோள விதைகளுக்கு ரூபா 1,306 மில்லியன் செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இருப்பினும், ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் பங்களிப்பு அடிப்படையல் விவசாயிகளின் கேள்வியை ஈடுசெய்யும் வகையில் விதைகளை உற்பத்தி செய்வதில் உச்ச அளவில் கவனம் செலுத்தவில்லை. | விவசாயத் திணைக்களத்தின் மஹஇலுப்பள்ளம வெளிக்கள பயிர்ச்செய்கை ஆராய்ச்சி நிறுவனதத்தின் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட மக்காச் சோள விதைகளுக்காக செய்யக்கூடிய புதிய இனங்களை அறிமுகப்படுத்துவது தொடர்பாக அறிமுகப்படுத்தல் தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உள்நாட்டு விதை உற்பத்தியை அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (இ) | சமூக பொருளாதார திட்டமிடல் நிலையத்தின் மூலம் செயற்படுத்தப்படும் காய்கறி பயிர்செய்கை தொடர்பான முன் விழிப்புணர்வு திட்டம், உணவு பாதுகாப்பு திட்டத்திற்காக பராமரித்துச் செல்லும் நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். காய்கறிகளின் பற்றாக்குறை அல்லது மிகை இல்லாமல் பேணுவதற்கு இந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், நாட்டில் காய்கறி விலைகள் ஆண்டின் சில நேரங்களில் அதிகரிக்கின்றன மற்றும் ஆண்டின் சில நேரங்களில் அசாதாரணமாக வீழ்ச்சியடைகின்றன. இதன் பிரகாரம் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த் நோக்கங்கள் அடையவில்லை. | இதற்கான பதிலை பணிப்பாளரிடம் கோரப்பட்டுள்ளதுடன் பதில் கிடைக்கப் பெற்றதன் பின்னர் சமர்ப்பிப்பதாக. | சரியான தரவுகளை உரிய நேரத்தில் பெற்று உரிய அறிக்கைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விதை சான்றுறுதிப்படுத்தல் மற்றும் தாவர பாதுகாப்பு சேவைப் பணிப்பாளரினால் தனது பதவிக் காலத்தில், தேசிய விஞ்ஞான மன்றத்தின் மூலம் 2014 ஆம் ஆண்டின் போது கோவா செய்கையில் வைரத்தின் அந்துப்பூச்சியை உயிரியல் ரீதியில் கட்டுப்படுத்துவது தொடர்பான செயற்திட்டத்திற்காக ரூபா 3,215,340 ஆன நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டு மேற்கொண்ட ஆராய்ச்சி 2020 நவம்பர் 10 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை | ஆராய்ச்சி திட்டமொன்றைத் தயாரித்து அதன் பிரகாரம் ஆராய்ச்சிகளைப் பூர்த்தி செய்வதற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.5 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதும் செயன்முன்னேற்றமொன்று பெற்றுக்கொள்ளாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் மூன்றாவது போகத்தில் பயறு மற்றும் கௌபி விசேட பயிர்ச்செய்கை செயற் திட்டத்திற்காக ரூபா 220.258 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 100.84 மில்லியன் நிதிஏற்பாடு விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் 2020 ஆகஸ்ட் 12 திகதிய கடிதத்தின் பிரகாரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் 15734 ஹெக்டேயர் மற்றும் 2500 ஹெக்டேயர் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காக ரூபா 80.81 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன், உரிய இலக்கை பூர்த்தி செய்யாததன் பேரில் நிதிஏற்பாட்டில் ரூபா 52.77 மில்லியன் பயன்படுத்தப்படவில்லை | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை | நிதிஏற்பாடுகளை மிக வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த வேண்டும். |

### 3.6 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 14 ஆம் இலக்க வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட 2020 ஆம் ஆண்டின் வருடாந்த வரைவு செயலாற்றல் அறிக்கை இணக்க அறிக்கையின் பிரகாரம் 2.9, 8.4 மற்றும் 9.1 ஆகிய விடயங்கள் இணங்கியதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ்விடயங்கள் இணங்கியிருக்கவில்லை. | நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு நாளதுவரையாக் கப்பட்டுள்ளதாக, கணிப்பீட்டு செயற்பாடுகள் மேற்கொள்வதில் தாமதம் காணப்பட்ட போதும் பொருள் ஏலவிற்பனையை ஒரே தடவையில் மேற்கொண்டு 2021 ஆகஸ்ட் 31 ஆந் திகதிக்கு முன்னர் கைதவிர்ப்பு செயற்பாட்டை மேற்கொள்வதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளதாக | தகவல்கள் மிகவும் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் தெரிவு பரிசோதனைக்காக தெரிவுசெய்யப்பட்ட சமூக பொருளாதார மற்றும் திட்டமிடல் பிரிவின் செயலாற்றல் குறிகாட்டிகள் தொடர்பாக பரீட்சித்த போது 06 குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருந்தது. அந்த அனைத்து குறிகாட்டிகளின் செயலாற்றல் 50 சதவீதத்தை மிகைத்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக்குறிகாட்டிகளைத் தயாரிப்பதற்கு அடிப்படையாக கொண்ட தொழில்நுட்ப செயல் நடவடிக்கை திட்ட அறிக்கை பிரிவிற்குரிய 18 செயற்பாடுகளில் 09 அதாவது 50 சதவீதத்திற்கு குறைந்த செயலாற்றல் மட்டமொன்றை அடைந்து கொள்ளப்பட்டிருந்தது. | Covid -19 தொற்று நிலைமை காரணமாக நாட்டில் போக்குவரத்து தடை காணப்பட்டமையால் கணிப்பீட்டு செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு முடியாமை மற்றும் வீட்டிலிருந்து ஆய்வு செய்வதற்கு நேர்ந்தமை இந்நிலைமையால் 2020 ஆம் ஆண்டின் போது எதிர்பார்த்த செயன் முன்னேற்றம் 2020 ஆம் ஆண்டின் போது தொழில் நுட்ப செயல் நடவடிக்கைத் திட்டத்தின் எதிர்பார்த்த சதவீதத்தை விட குறைவாக இருந்ததாக | திட்டத்தில் குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.7 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட 4 பெறுகைகளுக்குரிய கொள்வனவுகளுக்காக அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2 (அ) மற்றும் (ஆ) வழிகாட்டலின் பிரகாரம் பெறுகை காலஅட்டவணையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இச்செயற்திட்டத்திற்காக அங்கீகாரம் கிடைத்த காலப்பகுதியில் காணப்பட்ட கொவிட் தொற்று காரணமாக உத்தியோகத்தர்கள் வருகையும் முறையாக இடம்பெறாமையால் அவ்வாறான கால அட்டவணையொன்றின் பிரகாரம் முறையாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருந்ததுடன் இது தொடர்பாக என்னால் பணிப்பாளருக்கு தேவையான ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளதாக | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.6.1(அ) ii வழிகாட்டலின் பிரகாரம் பிராந்திய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட 2 பெறுகைகளுக்குரிய விதந்துரைகளை மீளாய்வு செய்வதற்கும் அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தாமதங்கள் மற்றும் விடுபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | - மேற்படி - |
| (இ) எனஜய்சர் (மின்சார வேலிகள்) கொள்வனவு செய்யும் பெறுகை செயற்பாட்டிற்காக அலகொன்று ரூபா 23,500 வீதம் வகையில் 851 அலகுகளுக்காக ரூபா 19,998,500 வரும் வகையில் மதிப்பீடு 2020 யூலை 21 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.3.1 (ஈ) வழிகாட்டலின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீடு | மின்சார வேலிகள் தேவையான காலப்பகுதியில் அதாவது ஆகஸ்ட் மாதம் இறுதி வாரத்தில் மாவட்டத்திற்கு கிடைத்துள்ளதாக | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை விவசாயிகளுக்கு தேவையான காலப்பகுதியில் வழங்குவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | தயாரித்தல், 4.3.3 வழிகாட்டலின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீட்டினை திருத்தம் செய்தல், 2.6.1(அ) ii வழிகாட்டலின் பிரகாரம் விதந்துரைகளை மீளாய்வு செய்தல், 5.3.11 வழிகாட்டலின் பிரகாரம் கேள்வி பிணை பொறுப்பு பாதுகாப்பு பெற்றுக் கொள்ளல் இடம் பெற்றிருக்கவில்லை. பயறு பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் பயிர்செய்கையை பாதுகாக்கும் நோக்கில் மின்சார வேலிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. மேலும் இதற்குரிய விவசாய சங்கங்களை தாபித்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட மின்சார வேலிகளை நிர்ணயிக்கப்பட்ட திகதியில் விவசாயிகளுக்கு வழங்க முடியாமல் ரூபா 3,138,750 பெறுமதியான 155 மின்சார வேலிகள் 2020 நவம்பர் 17 ஆந் திகதி வரை களஞ்சியங்களில் காணப்பட்டன. | | பிராந்திய நிறுவனங்களால் விவசாயிகளுக்கு உரிய பிரகாரம் வழங்குவது தொடர்பாக பின்விபரமொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஈ) | பேராதெனிய, சரசவி மாவத்தை, இலக்கம் 2/11 அரச விடுதியின் திருத்த வேலைகளுக்கான மதிப்பீட்டு உருப்படி இலக்கம் 37 இன் பிரகாரம் இலங்கையின் தரத்திற்கு இணங்க அஸ்பெஸ்டஸ் கொண்டு வரப்பட்டு பொருத்துதல் மற்றும் அதில் 229.07 சதுர மீற்றருக்கு ரூபா 229,070 தொகை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந் போதும் இரண்டு தடவை எமல்ஷன் பூச்சு பூசப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் ரூபா 75,135 தொகை ஒப்பந்தக்காரருக்கு கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் | தடுத்து வைத்தல் காலப் பகுதியில் குறைபாடுகளை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அவ்வாறில்லாவிட்டால் நிறுத்திவைத்தல் பணத்தை பயன்படுத்தி மேற்கொள்வதாக | ஒப்பந்த செயற்பாடுகள் முறையாக மேற்பார்வை செய்யப்படவேண்டும். |

மழை பீளிகளில் 2’’-0’ இடைவெளியில் பீளி ஆதாரம் (Gutter brackets) இடுதல் இடம்பெறாமை, விராந்தையின் திறந்த பிரதேசத்திற்காக Gage 10 GI சதுர வலைக்குப் பதிலாக Gage 12 GI சதுர வலையொன்று போடப்பட்டமை, சமையலறையில் நிலக் கற்கள் சிதைவடைந்து இருந்தமை மற்றும் உட்கூரையில் பீடிங் நாடா இடாமல் இருந்ததுடன் அந்த உருப்படிக்காக மொத்தம் ரூபா 340,945 தொகையொன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் காணி தொடர்பான செயற் கோவையின் 224 ஆவது பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தின் திணைக்களத்திற்கு சொந்தமான காணிப் பகுதியை அளவிடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு முறையான பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், விவசாயத் திணைக்களத்திற்குரிய 10 நிறுவனங்களின் 3901.82 ஹெக்டேயர் அளவிலான மொத்தக் காணியில் 2943.07 ஹெக்டேயர் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | இடத்தின் உரித்தை சட்டரீதியாக கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் இப்போதே எடுக்கப்பட்டுள்ளதாகவும் கையேற்பு செயற்பாடு வேறு ஏனைய இரண்டு இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள ஒவவொரு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகம் மற்றும் நில அளவைத் திணைக்களம் என்பவற்றின் கீழ் மேற்கொள்ள வேண்டியிருப்பதாகவும் நாட்டில் காணப்படும் கொரோனா நிலைமை காரணமாக இக்கையேற்றல் செயற்பாட்டில் தாமதம் காணப்படுகின்றது. | திணைக்களத்தின் உடமமையான கோருகின்ற சகல காணிகளும் விடுவிக்கப்பட்டு உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தாவர தனிமைப்படுத்தல் பிரிவிற்கு 2019 ஒக்தோபர் 29 ஆந் திகதி ஏதேனும் பிராணி அல்லது நடுத்தர வளருவதற்காக தேவையான உஷ்ணத்தையும் ஈரப்பதனையும் பேணுவதற்கான | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,594,672 பெறுமதியான இன்கியுபேடர் உபகரணம் கணக்காய்வு திகதியான 2020 நவம்பர் 10 ஆந் திகதி வரையில் முத்தரப்பு மின்சாரத்தை பெற்றுக் கொள்ளாமை காரணமாக 11 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்டன. | | |
| (இ) | பேராதெனிய, சரசவி மாவத்தை, இலக்கம் 2/11 அரச விடுதியில் ரூபா 1,850,614 தொகை செலவு செய்து திருத்த வேலைகள் 2020 சனவரி 8 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டு திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அத்திகதியிலிருந்து அவ்வீடு விளைவற்றுக் காணப்பட்டது. | இவ்வீடு திருத்தம் செய்யப்பட்டு 2020.01.08 ஆந் திகதி வீட்டின் உரிமையாளரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. வேலைத் தளத்தில் கழற்றி அகற்றிய பயன்பாட்டிற்கு எடுக்க கூடிய பொருட்களை முறையாக கையேற்குமாறு உரிமையாளருக்கு அறிவித்து விரயத்தை தவிர்ப்பதற்கு அவ்வீட்டிலேயே களஞ்சியப்படுத்தப்பட்டது. | சொத்துக்கள் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த வேண்டும் |
| (ஈ) | பட்டஅத பண்ணையில் உற்பத்தி செய்கின்ற விதை நெல்லைக் களஞ்சியப்படுத்து வதற்காக ரூபா 11,371,010 ஆன கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டு 2018 ஆம் ஆண்டில் களஞ்சியமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அதன் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 1,891,888 பெறுமதியான அலுவலக பகுதி 2020 செப்தெம்பர் 04 ஆந் திகதி வரை விளைவற்றுக் காணப்பட்டது. | களஞ்சியம் மற்றும் விதை தயாரிப்பு பிரிவிற்குரிய அலுவலக பகுதி கமம் போன்றவற்றின் காய்த்தல் உட்பட முன் தயாரிப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர் /பெண் உத்தியோகத்தரின் தேவைக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் | - மேற்படி - |
| (உ) | பட்டஅத பண்ணையில் பயிரிடல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 4,911,478 பெறுமதியான 10 உழவு இயந்திரங்கள், ரூபா 550,000 பெறுமதியான 4 கை உழவு இயந்திரங்கள் மற்றும் ரூபா 80,000 பெறுமதியான 4 மோட்டார் சைக்கில்கள் மற்றும் 05 | கைதவிர்ப்பதற்காக கேள்வி கோருவதற்கு எதிர்பார்த்துள்ளதாக | நிறுவனத்திற்கு சொந்தமான வளங்களை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்த வேண்டியதுடன் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத வளங்களை முறையாக |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களுக்குரிய 15 வாகனங்கள் விளைவற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் காணப்பட்டன. | | கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | இளைஞர் விவசாய தலைமையகத்தினால் 2009 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த மற்றும் 2008 ஆம் ஆண்டின் மக்கள் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த நிலையான வைப்புக்களின் பெறுமதி 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முறையே 1,212,500 மற்றும் ரூபா 1,027,271 ஆக இருந்தன. உரிய நிலையான வைப்புக்கள் நிதி பயன்பாட்டு நடவடிக்கை ஈடுபடுத்துவது தொடர்பில் 2016 ஆம் ஆண்டில் தேசிய மாநாட்டில் கவனம் செலுத்தப்பட்ட போதும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த பணம் விளைவற்றுக் காணப்பட்டது. | 2017.12.11 ஆந் திகதி நடைபெற்ற இளைஞர் விவசாய சங்க தேசிய சபைக் கூட்டத்தின் போது அவ்விடயங்கள் கலந்துரையாடப்பட்ட போதும் இறுதி முடிவுக்கு வரவில்லையெனவும் இது தொடர்பாக எதிர்காலத்தில் உரிய உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி அந்நிதியை பயனுள்ள செயற்பாடொன்றிற்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக | சொத்துக்கள் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த வேண்டும் |
| (எ) | 02 நிறுவனங்களுக்குரிய 10 அரச வீடுகளுக்குரிய 4.2603 ஹெக்டேயர் அளவிலான காணித் துண்டொன்று அத்துமீறி பிடிக்கப்பட்டிருந்ததுடன், பிபில பூங்கா பயிர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்குரிய 0.0252 ஹெக்டேயர் மற்றும் அம்பாறை பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள் மற்றும் நடுகை பொருட்கள்) அலுவலகத்திற்குரிய சுற்றுலா விடுதியின் 02 பேர்ச் அளவிலான காணித்துண்டொன்றும் அத்துமீறி பிடிக்கப்பட்டிருந்தது. | அத்துமீறிய உடமையாளர்கள் அகற்றப்பட்டு உரிய காணிகள் இத்திணைக்களத்திற்கு முறையாக கையேற்பதற்கு உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | அத்துமீறிய கைப்பற்றல்கள் தொடர்பாக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.9 அரச உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881(1) விவசாயத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய 17/2015 ஆம் திணைக்கள கட்டளை இலக்கம் மற்றும் 612 ஆம் அதிகாரத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 06 நிறுவனங்களின் பிணை வைக்க வேண்டிய 83 உத்தியோகத்தர்களால் 2020 திசெம்பர 31 ஆந் திகதி வரையிலும் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்காத உத்தியோகத்தர்கள் பிணை வைப்புச் செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரமும் திணைக்களத்தின் கட்டளைகள் பிரகாரமும் உரிய உத்தியோகத்தர்களால் பிணை வைக்க வேண்டும். |

### 3.10 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் 01 இல் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மேலும் அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு அல்லது கைவிடுவதற்கு உள்ள நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக 390 சம்பவங்களுக்குரிய ரூபா 320,279,512 பெறுமதியான நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சம்பவங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பரசோதனை செயற்பாடுகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மிகை அறவீடு செய்யும் போது உருவாகிய சிக்கல்கள் (உதா: ஓய்வூதியத்திலிருந்து அறவிடுவதில் சிக்கல், சட்ட சிக்கல்கள், பொறுப்பானவர்களால் முன்வைக்கப்படும் பெடிஷன்கள், மேன்முறையீடுகள்) மற்றும் அதிக காலம் எடுத்தல் மற்றும் கூடுதலான காலத்திற்கு பின்னர் அறிக்கையிடப்படல் போன்ற விடயங்கள் காரணமாக நட்டம் தொடர்பாக இறுதி தீர்மானங்களை எடுப்பதற்கு கூட போதியளவு தகவல்கள் இல்லாமையால் குறித்த நட்டங்கள் தொடர்பாக இறுதி தீர்மானங்களை எடுத்தல் தாமதிக்கப்பட்டதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பூரண அறிக்கை, நட்டங்கள் சேதங்கள் இடம்பெற்ற திகதி முதல் 03 மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 226 சம்பவங்கள் தொடர்பாக மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருந்தன. | 445 சம்பவங்களுக்கு இடையே 219 சம்பவங்கள் நிதிப் பிரமாணம் 104(4) பரசோதனை செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் அறவிடல், பதிவேடுகளிலிருந்து பதவழித்தல் தொடர்பாக எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2020 சிறு போகத்தில் கரடியனாறு அரச விதை உற்பத்தி பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 5,404,000 பெறுமதியான 15,420 கிலோ கிராம் நிலக் கடலை விதைகள் அளவொன்று கணக்காய்வு திகதியான 2020 திசெம்பர் 18 ஆந் திகதி வரை முளைதிறன் குறைவடைந்தமை காரணமாக நுகர்வுப்பொருட்களாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பல்வெஹர குளிர் களஞ்சியத்தில் இடவசதிகள் போதியளவில் இல்லாமையாலும் ரிகில்லகஸ்கட விதை போஞ்சி களஞ்சிய பிரிவில் 34000 கி.கி இற்கு அண்மித்த அளவொன்று களஞ்சியப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாகவும் ஏனைய மேலதிக உணவுப் பயிர்களுக்கு ஒப்பாக நிலக்கடலை சோயா போன்ற விரைவில் முளைக்கும் சதவீதம் குறைவடைவதற்கு இயலுமை காணப்படுகின்றது. எதிர்காலத்தில் தேசிய தேவைப்பாட்டின் பிரகாரம் நிலக்கடலை விதை அதிகளவில் விதைகள் மற்றும் நடுகை பொருட்கள் அபிவிருத்தி நிலயத்தின் மூலம் கொள்வனவு மற்றும் வழங்கல் இடம்பெற வேண்டியுள்ளதால் பொருத்தமான களஞ்சிய வசதிகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | உற்பத்தி செய்யப்படும் விதைகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கபபட வேண்டும். |

## 3.11 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புடோல், கத்தரி, பாகற்காய் மற்றும் பயற்றங்காய் செய்கையின் இறக்குமதி உள்நாட்டு விதை தேவைப்பாட்டிற்கு ஒப்பாக 15 சதவீதம் போன்ற குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதும் ஏனைய பயிரினங்களின் | இலங்கையில் உள்நாட்டு மரக்கறி விதைகள் தேவைப்பாடு பல வழிகளில் நிறைவேற்றப் படுகின்றன. விவசாயத் திணைக்களம், தனியார் நிறுவனங்கள், தனியார் விவசாய விதை உற்பத்தியில் ஈடுபடுவதுடன் அதற்கு மேலதிகமாக | உள்நாட்டு விதை உற்பத்தியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறக்குமதி உள்நாட்டு விதை தேவைப்பாட்டிற்கு ஒப்பாக 31.3 சதவீதம் முதல் 96 சதவீதம் வரை உயர் வீச்சில் உள்ளதாகவும் இறக்குமதி அளவினை குறைப்பதற்கும் அதற்காக செலவினத்தைக் குறைப்பதற்கும் உள்நாட்டு உற்பத்திக்கு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக விவசாயத் திணைக்களத்தின் பங்களிப்பு போதியளவில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தேவைப்பாட்டின் ஏதேனும் சதவீதமொன்று இறக்குமதி செய்யப்படுவதாகவும் இறக்குமதி விதைகளில் இலங்கையில் கூடுதலான சதவீதமொன்று உளநாட்டு காலநிலைமையின் கீழ் விதைகளை உற்பத்தி செய்ய முடியாத கோவா, பீட், நோகோல், கரட், கறி மிளகாய் (HYW) போன்ற மலைநாட்டில் மரக்கறி உற்பத்திக்குரிய விதைகளின் வகையாகும். | |
| (ஆ) | உற்பத்திச் செலவின கணிப்பீட்டு அறிக்கையை தயாரிப்பதற்குரிய வெளிக்கள தரவுகளை கணனி மயப்படுத்தும் போது ஏற்படும் தாமதங்களைக் குறைப்பதற்கு தரவுகள் மிக சரியாகவும் இலகுவாகவும் வெளிக்களத்தில் உள்ளீடு செய்யக்கூடிய வகையில் மென்பொருட்களை நிறுவுதல் பொருத்தமாக இருந்த போதும் 2020 ஒக்தோபர் 23 ஆந் திகதி வரையிலும் இப்பிரிவின் நடவடிக்கைகளுக்காக பொருத்தமான மென்பொருளொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | உற்பத்திச் செலவின கணிப்பீட்டு அறிக்கைக்காக கணனிமயப்படுத்தப்பட்ட நடைமுறையொன்றை தயாரிப்பதற்காக தேவையான ஏற்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் 2021 ஆம் ஆண்டிற்கு உரிய செய்திட்ட முன்மொழிவில் விவசாயத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக. | மென்பொருட்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் மிகவும் சரியான தரவுகளை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ள முடியுமாக இருத்தல். |
| (இ) | முன்னறிவித்தல் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு தரவுகளை வழங்கும் விவசாய ஆலோசகர்களுக்கு அவர்களின் குறித்துரைக்கப்பட்ட கடமைளை (Routing Work) மேற்கொள்ளும் போது 15 நாட்களில் 15 நாட்கள் தமது அதிகாரப் பிரதேசங்களில் பயிர்ச்செய்கை அளவுகள் வேறுபடுதல் தொடர்பாக தரவுகளை அறிக்கையிட முடியுமா எனவும் அவ்வாறு அறிக்கையிடும் போது உருவாகும் நடைமுறைச் சிக்கல்கள் எவையென்பது தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் இந்நிகழ்ச்சித்திட்டம் | விவசாய மதியுரையாளர்களின் அடுத்த கூட்டங்களுக்காக ஒவ்வொரு பயிர்களினதும் பயிர்ச்செய்கை முன்னேற்த்தை பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இது விவசாய ஆலோசகர்களுக்கு அவர்களின் குறித்துரைக்கப்பட்ட கடமைகள் (Routing Work) ஆகும். இங்கு பெற்றுக்கொண்ட தரவுகளை அவ்வப்போது விவசாய அலுவலகங்களிலிருந்து தரவுகளை சேகரிக்கும் உத்தியோகத்தர்கள் மூலம் முறைமைக்கு சேர்த்தல் இடம்பெறுவதால் பயிர் எதிர்வுகூறல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தொடர்பான பயிற்சியளித்தல் மற்றும் அறிவூட்டுதல் ஒவ்வொரு ஆண்டும் இடம்பெறுகின்றது. இங்கு | இந்நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக்க பயன்படுத்துவதற்கு பின்தொடர் நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | பயிர்களில் உள்ள சிக்கல்களை இனங்கண்டு சீராக்குதல் இடம்பெறுவதாக | |
| (ஈ) | விவசாயத் திணைக்களத்தின் சமூக பொருளாதார ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல் மேற்கொள்கின்ற ஒரே நிறுவனமான சமூக பொருளாதார நிலையத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருந்த மரக்கரி பயிர்ச்செய்கை தொடர்பான முன்னறிவித்தல் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு முன்னோடித் திட்டம் மற்றும் சாத்தியவள ஆய்வொன்றும் இல்லாமல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தும் போது உரிய சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | தேனீக்கள் அபிவிருத்தி பிரிவினால் நடாத்திச் செல்லப்படும் தேன் கிராமங்களுக்காக 2020 ஆம் ஆண்டின் முதல் காலப்பகுதியில் ஏற்பட்ட வைரஸ் நிலைமை காரணமாக 114 கிராமங்கள் சேதமடைந்திருந்ததுடன் எதிர்காலத்தில் தேனீக்களுக்கு பாதகமான காலமாக இருப்பதால் இவ்வைரஸ் தொற்று மேலும் பரவும் ஆபத்தொன்று காணப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆதலால் இவ்வரைஸ் நோயினைக் கட்டுப்படுத்துவதற்காக ஆராய்ச்சியொன்று அல்லது முறையான நடைமுறையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பணிப்பாளக்கு தேவையான ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளதாக | நிறுவனத்தின் பிரதான செயற்பாடொன்றாக இருப்பதால் மிகவும் செயற்திறனாக உரிய சிக்கல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஊ) | தேனீக்கள் அபிவிருத்தி பிரிவினால் கடந்த 05 ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக பரீட்சிக்கும் போது திணைக்களத்தின் | பயிற்சி நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தல்கள் பிரதானமாக வேண்டுகோலின் பேரில் மேற்கொள்ளப்படுவதுடன் மேற்படி செயன்முன்னேற்ற அறிக்கையில் மாற்றங்கள் ஏற்படலாம்.எனினும் இது தொடர்பாகபணிப்பாளருக்கு | பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தும் செயன்முன்னேற்றத்தை அதிகரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பல்கலைக்கழக மாணவர்கள் தேனீக்கள் கட்டுப்பாட்டு உபகரணங்களை தயாரிப்போர் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சியளிக்கும் செயன்முன்னேற்றம் படிப்படியாக குறையும் நிலைமையொன்று காணப்பட்டது. | ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | |
| (எ) | கன்னொருவ பூங்காப் பயிர்கள் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் காணப்பட்ட எரமினிகொல்ல ரம்புட்டான் ஆராய்ச்சிப் பிரிவு 2014 ஆம் ஆண்டின் போது பழவகை பயிர்ச்செய்கை மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தது. அத்திகதி முதல் கணக்காய்வு திகதியான 2020 திசெம்பர் 10 ஆந் திகதி வரையிலும் எவ்வித ஆராய்ச்சி செயற்பாடொன்றும் மேற்கொள்ளப்படவில்லை. | விவசாயத் திணைக்களத்திற்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பாக காணப்படும் நீதிமன்ற நடைமுறைகளைக் காரணமாக கொண்டு அப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இந்நிலைமையில் பிரதேச ரீதியில் நடைபெற்ற ஆராய்ச்சி பண்ணைகளுக்கு ஆராய்ச்சிக்காக உத்தியோகத்தர்களை தொடர்புபடுத்துவது சிக்கலாக உள்ளது. இதன் காரணமாக தாய் மரங்களைப் பாதுகாப்பு மற்றும் நாற்று உற்பத்தி மாத்திரம் மேற்கொள்ளப்படுவதாக. | ஆராய்ச்சி உத்தியோகத்தர்களை விரைவில் ஆர்சேர்ப்பு செய்து ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக பிரதேச ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஏ) | இளைஞர் விவசாய சமூக உறுப்புரை கோவையின் 58 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சபைக்கு குறைந்தது வருடமொன்றுக்கு ஒரு தடவை கூட வேண்டிய போதிலும் இளைஞர் விவசாய சமூக தேசிய மாநாடு இறுதியாக 2016 பெப்ரவரி 07 ஆந் திகதி நடாத்தப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உரிய மாநாட்டை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | விவசாய செயற்பாடுகளுக்காக இளைஞர் யுவதிகளை கவருவதற்காக இச்செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மஹஇலுப்பள்ளம பண்ணை இயந்திர ஆராய்ச்சி நிலையத்தின் பிரதி பணிப்பாளர் நாயகத்தின் வருகை, வெளியேறல் மற்றும் விடுமுறை பெற்றுக் கொள்வதில் முறைகேடுகள் முன்னோடித் திட்டங்கள் சமர்ப்பிக்காமை, அங்கீகாரமொன்று இல்லாமல் அலுவலகத்திலிருந்து வெளியேறுதல், கடமை நேரத்தினை மேவுகை செய்யாமை, கீழ் வேலை செய்பவர்களுக்கு ஒழுங்கற்ற முறையில் கதைத்தல், கீழ் வேலை செய்பவர்களை தமது சொந்த வேலைகளுக்கு ஈடுபடுத்துதல் மற்றும் தமது ஊழியர்களை சேவை நேரத்தில் மேலதிக வகுப்புகளுக்காக ஈடுபடுத்துதல் போன்ற முறைகேடுகள் இடம்பெற்றிருந்த போதும் அது தொடர்பாக தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக வகுப்புக்களை நடாத்துவதற்கு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவது தொடர்பாக ஆரம்ப புலனாய்வு அறிக்கை அறிக்கையிடப்பட்டு பரிந்துரையின் பிரகாரம் மஹாஇலுப்பள்ளம பண்ணை இயந்திர ஆராய்ச்சி நிலையத்தின் இயந்திர பொறியியலாளருக்கு கடுமையாக எச்சரிக்கை விடுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கவில்லையெனவும் | குறித்த உத்தியோகத்தர் தொடர்பாக முறையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விவசாயத் திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் ஒவ்வொரு நோக்கங்களுக்குரிய குறிகாட்டிகள் தாபிக்கப்பட்டிருந்த போதும் ஒவ்வொரு குறிகாட்டிகளை அளவிடுவதற்கு போதியளவு அளவு கோல்கள் அல்லது நடைமுறைகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை தயாரித்தல் தேசிய நிலைபேறான அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை விவசாயத் திணைக்களத்திற்கு உரிய திட்டவட்டமான நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகள் தொடர்பாக சரியான தகவல்கள் விவசாயத் திணைக்களத்திற்கு வழங்கப்படவில்லையென | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றுவதற்குரிய குறிகாட்டிகளை அளவிடுவதற்கு போதியளவு அளவு கோல்கள் அல்லது நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் விதம் தொடர்பில் காலசட்டகம் தொடர்பாக திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் ஒவ்வொரு ஆண்டிற்காக நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்ற உரிய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உரிய திட்டங்கள் தயாரிக்கப்படுவதாக | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றக்கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நடவடிக்கைகளை முறையாகவும், திறமையாகவும் பேணிச் செல்வதற்கு சேவைகளுக்குத் தேவையான பொருத்தமான சந்தர்ப்பங்களின் போது இனங்காணப்பட்டு தேவையான சந்தர்ப்பத்தில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 2672 வெற்றிடங்களை நிரப்வுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அனைத்து பதவிகளிலும் காணப்படும் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | விரைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |